T-UN-494

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# சோளிங்கபுரம்
# அருள்மிகு
# யோக நரசிம்மசுவாமி
# யோக ஆஞ்சநேயர்
# தல வரலாறு

1697


1—9—78 முதல்

## திருக்கோயில் திருமஞ்சனம் தளிகை, வகையரு கட்டணம்

| | | ரூ பை |
|---|---|---|
| 1 | ஸ்ரீலஷ்மி நரசிம்மஸ்வாமி மலையில் ஸ்ரீ அமிர்தபலவல்லித்தாயாருக்கு வெள்ளிக்கிழமை பிரார்த்தனை உத்ஸவம் 1-க்கு | 300—00 |
| 2 | சின்ன மலையில் ஸ்ரீ ராமருக்கு ஞாயிறு அல்லது புனர்பூச தினங்களிலும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிக்குப் பிரார்த்தனை உத்சவம் ஒன்றுக்கு எந்தத் தினத்திலும் | 225—00 |
| 3 | சோளிங்கபுரம் ஊர் கோயில் ஸ்ரீ பக்தோசித சுவாமிக்குப் பஞ்சபர்வ தினங்களிலும் பிரார்த்தனை உத்சவம் ஒன்றுக்கு | 300—00 |
| 4 | புஷ்ப அங்கி சேவை சன்னதி ஒன்றுக்கு .. ... | 75—00 |
| 5 | வெள்ளிக்கிழமைகளில் பெரிய மலையில் சந்தனக் காப்பு சேவை சன்னதி ஒன்றுக்கு ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி எந்தத் தினத்திலும் சந்தனக்காப்பு சேவை சன்னதி ஒன்றுக்கு | 75—00 |
| 6 | திருவாபரணம் சேவை சன்னதி ஒன்றுக்கு ... | 75—00 |
| 7 | தாயார் சன்னதியில் மஞ்சள் காப்பு ... | 30—00 |
| 8 | கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் சன்னதி ஒன்றுக்கு .... | 75—00 |
| 9 | சிறிய மலையில் ஞாயிறு தினங்களில் ஆஞ்சநேயர் ராமர் திருமஞ்சனம் ஒவ்வொன்றுக்கும் | 15—00 |
| | ஞாயிறு தவிர இதர தினங்களில் சிறியமலையில் திருமஞ்சனம் 1க்கு .... | 16—00 |
| | வெள்ளிக்கிழமை மட்டும் பெரியமலையில் சுவாமி தாயார் திருமஞ்சனம் சன்னதி 1-க்கு | 15—00 |
| | துவாரபாலகர் சப்த ரிஷிகள் திருமஞ்சனம் 1க்கு.... | 16—00 |
| 10 | ஸகஸ்ரநாமம் அர்ச்சனை ஒன்றுக்கு ... .. | 4—50 |
| 11 | ஸகஸ்ரநாமம் அர்ச்சனை மண்டலம் ஒன்றுக்கு நித்திய உபகாரம் தளிகை உட்பட | 300—00 |


ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



சோளிங்கபுரம்

# அருள் திரு யோகநரசிம்மசுவாமி யோக ஆஞ்சநேயர் தல வரலாறு



## சோளிங்க புரம் ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமி

மலைப்படிகள், கோபுர விமானங்கள், மண்டபங்கள், சிறியமலை
படிக்கட்டுகள், கோபுர விமானங்கள், பாண்டவ தீர்த்தம்
என்ற தக்கான்குளம் படிக்கட்டுகள் ஆகிய திருப்பணிகள்
முடிவதற்குக் காரணகர்த்தராக இருந்து
அரும்பாடுபட்டுப் பணிபுரிந்து வரும்

**செம்மல் ஸ்ரீமான் இராமானுஜ ஏகாங்கி சுவாமி**
அவர்கட்கும்,

**திரு முதலியாண்ட முதலியார்,**
**திரு ஜெகன்னாத ரெட்டியார்,**
**திரு எம். ஏ. எத்திராஜலு நாயுடு அவர்கட்கும்**
**திருப்பணி முடிய உதவிய அனைவருக்கும்**

**இந்நூல் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.**

# அணிந்துரை

திருமாலின் அவதாரங்களிலே தனிச்சிறப்பு வாய்ந்தது ஸ்ரீநரசிம்மாவதாரம். ஸ்ரீமந் நாராயணனிடத்தில் எல்லையற்ற பக்தி கொண்டிருந்த ஒரு பாலகனின் சொல்லைக் காப்பாற்றுவதற்காக, ஒரு க்ஷண நேரம், பூரண தெய்வாம்சத்துடன் நிகழ்ந்தது ஸ்ரீநரசிம்மாவதாரம். அதுமட்டுமல்ல. "எங்கும் இருப்பதாக நீ சொல்லும் அந்த நாராயணன் இங்கு இருக்கிறானா?" என்று இரணியன் கேட்டு, "ஆம் அங்ஙனம் இருக்கிறான்" எனக் குழந்தை பிரஹ்லாதன் மறுமொழி பகர்ந்தான். அவன் வார்த்தை பொய்த்துப் போகாமல் இருக்க வேண்டுமே என்று, ஸ்ரீமந் நாராயணன் நரசிம்ம உருவத்துடன் எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் அருவமாக வீற்றிருந்தான். இரணியன் ஒரு தூணைக் காலால் உதைத்து "இங்கு இருக்கிறானா உன் நாராயணன்?" எனக் கேட்கவும், சட்டென அத் தூணினின்றும் வெளிவந்தான் நரசிம்ம ரூபத்தில். இந் நிகழ்ச்சியை, நம்மாழ்வார் திருவாய் மொழியால் திருப்பாசுரத்தில் வெகு அழகாகச் சித்திரிக்கிறார்.

"எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்ற இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய என்
சிங்கப் பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே?" 12. 8. 9.

எனப் போற்றி இருக்கிறார் நம்மாழ்வார்.

துஷ்டர்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணும் தோற்றம் உடையவனாகவும் அதே சமயத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் ஆனந்த ரூபியாகவும் காட்சியளித்தான் ஸ்ரீநரசிம்மன். பெரிய பிராட்டியான ஸ்ரீமகாலட்சுமியும் உடன் வீற்றிருக்க ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மனாகக் காட்சியளிக்கும் திருமாலின் கருணா கடாட்சம் எல்லையற்றதாகும்.

திருமாலின் பக்தர்களிலே தலைசிறந்து விளங்குபவர் ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி. இராமாவதாரத்தில் உருவமாகவும், கிருஷ்ணாவதாரத்தில் அர்ச்சுனனின் தேர்க் கொடியில் அருவமாகவும் இருந்து, திருமாலின் அவதார லக்ஷியம் ஈடேறப் பேருதவி புரிந்தவர் ஸ்ரீஆஞ்சநேயர். கல்வியிலும், சொல் வன்மையிலும், அறிவாற்றலிலும், உடல் வலிமையிலும், பக்தியிலும், நட்பிலும், இட்ட காரியத்தைச் செவ்வனே செய்து முடிக்கும் திறமையிலும், எல்லாவற்றிற்கும்

மேலாக நம்பியவர்களின் ஆருயிர்த் தோழனுகவும், இன்னும் பலபல சிறப்புக்கள் பெற்றவராகவும் விளங்கியவர் ஸ்ரீஆஞ்சநேயர். கருடாழ்வாருக்கு அடுத்தபடியாகத் திருமாலின் சிறிய திருவடியாக இருந்து சதா காலமும் அவருக்குச் சேவைசெய்யும் பெரும் பாக்கியம் பெற்று விளங்குபவர் ஸ்ரீஆஞ்சநேயர்.

திருமாலின் அவதாரமான ஸ்ரீலக்ஷ்மிநரசிம்மரையும், திருமாலின் சிறிய திருவடியெனப் போற்றப்படுகிற ஸ்ரீஆஞ்சநேயரையும் ஒருங்கே தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள், "பெரும் பாக்கியவான்கள்" ஆவார்கள் என்று சொல்லத் தேவையில்லை.

வடாற்காடு மாவட்டம், சோளிங்கர் ஸ்தலத்தில் இவ்விருவரும் அருகருகில் இரு சிறு குன்றுகளின்மீது அமர்ந்திருந்து, தங்களை நாடிவரும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

ஸ்தல வரலாற்றையும், திவ்யதேசச் சிறப்பையும் எடுத்துக்கூறும் இச் சிறு நூலை ஒரு பக்தர் வெளியிட்டிருப்பது போற்றுதற்குரிய செயலாகும். வழக்கமாகக் கொடுக்கப்படும் விவரங்களுடன் நின்று விடாமல், ஆழ்வார்களின் மங்களாசாசனப் பாசுரங்கள், ஸ்ரீயோக நரசிம்ம சுப்ரபாதம், மங்களம், திருக்கடிகாசலம் எம்பெருமான் கட்டியம் ஆகியவற்றையும் (சம்ஸ்கிருதச் சுலோகங்களுடன் தமிழ் மொழி பெயர்ப்பையும் இணைத்து) வெளியிட்டிருப்பது, சந்நிதிக்கு வரும் பக்த கோடிகளுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்றாட அல்லல்களில் உழன்று, வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து மீள்வதற்கு வழி காண முடியாமல் தத்தளிக்கும் குடும்பத்தினர், பக்தி சிரத்தையுடன் இந்த இரு ஸ்தலங்களுக்கும் சென்று, விதி வழுவாமல் வழிபடுவார்களேயானல், அவர்களுக்கு மன அமைதியும், நற்காரிய சித்தியும் கைகூடும் என்பது பன்னெடுங் காலமாகப் பல மக்கள் அநுபவபூர்வமாகக் கண்ட உண்மையாகும். இச் சிறு நூலின் மூலமாக மேலும் பலர், நற்பயனடையத் திருமால் அருள்புரிவானுக.

திருமயிலை,<br>சென்னை,<br>22—12—'79

குருஜி சுந்தராமன்,<br>(வள்ளிமலை)



ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா குரவே நம:





# சோளிங்கபுரம், தல வரலாறும் திவ்ய தேசத்தின் சிறப்பும்

ஸப்த ஸப்தேஷு லோகேஷு நாஸ்தி நாஸ்தி சராசரே:
நாஸ்தி நாஸ்தி ஸமம்க்ஷேத்திரம் உத்தமம் கடிகாசலம்//
கடிகாத்திரி ஸமம் ஸ்தானம் ப்ரம்மாண்டே நாஸ்திகிஞ்சந:
நாரஸிம் ஹஸமோ தேவோ நபதோ நபவிஷ்யதி//

திருக்கடிகை என்னும் புண்ணிய தேசம், தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 22-ல் ஒன்ருகும். "சோளிங்கர்" என்று தற்காலத்தில் வழங்கப்பெறும் இவ்வூர், அரக்கோணம் புகைவண்டி நிலயத்திலிருந்து 25வது கிலோமீட்டர் தூரத்தில் மேற்கே உள்ளது. புராணப் பெருமை வாய்ந்த இவ்வூர் சோழநாடு போன்று வளம் மிகுந்து நரசிங்கப்பிரான் உறைதற்கு இடமாதல்பற்றி, "சோளஸிம்மபுரம்" என்று வழங்கப் பட்டு இப்பொழுது சோளிங்கர் என்று வழங்கப்படுகிறது. திருமங்கை ஆழ்வாரால் "கடிகைத் தடங்குன்றின் மிசை யிருந்த அக்காரக்கனி" என்றும், பேயாழ்வாரால் "வண்பூங் கடிகை" என்றும் பாடப்பட்ட புண்ணியதேசம் இது. இந்தத்

திருப்பதியில் ஏக சிவா பர்வதமெனப்படும் பொன்மயமான சிலையின்மீது ஏழு முனிவர் அன்பராவரும், வாமதேவர் முதலான இருடிகளுக்கு முக்திதரும் பொருட்டு ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் மூன்ருவது அம்சத்தில் தன் (ஸ்வாதி) நட்சத்திரம், பௌர்ணமி கூடிய வெள்ளிக்கிழமையில், வைகாசி மாதத்தில் உத்தமமான மாலைக்காலத்தில் அழகிய சிங்கமாக ப்ரஹ்லாதனுடைய மகிழ்ச்சிக்காக, யோக பாவத்தினலே, வீற்றிருந்த – திருக்கோலத்துடன் கிழக்கு முகமாக ஹேம கோடி விமானத்தில் தோன்றினர். ஆகவே, ஒரு நாழிகையில் மகிழ்ச்சியடைந்த காரணத்தினல் இம்மலை '' ''கடிகாசலம்'' என்று பெயருள்ளதாயிற்று. (கடிகை - நாழிகை, அசலம்-மலை) (கடிகை + அசலம் = கடிகாசலம்)

சங்ககாலவரசனன கரிகாற் சோழன் - பட்டினப்பாலை எனும் நூலில் திருமாவளவன் என்று கூறப்பெறுபவன்-காலம் கி. மு. முதல் நூற்ருண்டு என்றும் கி. பி. இரண்டாம் நூற்ருண்டு என்றும் கூறுவர். அவன் சோழவள நாட்டை 48 கோட்டங்களாகப் பிரித்தான் என்றும், அவற்றுள் கடிகைக் கோட்டம் என்று இது வழங்கப்பட்டது எனவும் அறிகிருேம்.

பல்லவர்கள் காலத்தில் (650—750) கடிகை என்பது பல கலைகளையும் வடமொழி தென் மொழிகளையும் கற்பிக்கும் இடமாகப் பல்கலைக் கழகமாகக் கருதப்பட்டது. பிற்காலச் சோழர்களில் ஒருவன் இங்குச் சிவ கேசவர்களுக்கு ஓராலயம் எடுத்து வழிபட்டான். பின்னர் சுவாமி தொட்டையாசார் காலத்தில் சிவகேசவர் ஆலயத்தைப் பெருக்கி நரசிம்மரின் உற்சவமூர்த்தியை எழுந்தருளச் செய்தது போலவே லிங்க மூர்த்தியை ஈசான்யபாகத்தில் தனிக் கோயில் கட்டி எழுந்தருளச் செய்த காரணத்தால்,

சோளசிம்ஹபுர மேத தேததே
சோள ராஜபரி கர்மிதம் புரா/
பத்தஸம் இது சிதாபிமானிதம்
கேசவோ தவஸிதம் புராதனம்//

"சோளசிங்கபுரம்" என்று வைணவர்களாலும் "சோழ லிங்கபுரம்" என்று சைவர்களாலும் அழைக்கப்படலாயிற்று என்று பெரியோர் கூறுவர். ஆயின் "சோளிங்கபுரம்" என்ற வழக்கு அக்காலத்தே இருந்து வந்தது என்பதற்குச் சான்ருக, ஊர்ப் பெருமாள் கோயிலின் உட்சுற்றின் தென்மேல் பகுதிக் கல்வெட்டொன்றினைக் காணலாம். இக் கல்வெட்டின் காலம் கி.பி. 1595. இது அரக்கோணம், சித்தூர், திருத்தணி முதலிய வற்றின் நடுவில் அமைந்து, தமிழகத்தின் தற்போதைய வடஎல்லையாக உள்ளது. இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது.

ஆங்கிலேயருக்கும், ஐதரலிக்கும் நடந்த இரண்டாம் கர்நாடகப்போர் 1781...... இவ்வூரின் தென்பகுதியில் நடந்தது. அப்போது இறந்த வீரர்களைப் புதைத்த ஒரு கல்லறை திருக்குளத்தின் எதிரில் இப்பொழுதும் காணலாம்.

ஒரு வியக்கத்தக்க செய்தி:- பெருமாள் புறப்பாட்டின் போது மசூதி எதிரில் இந்து முறைப்படி மேளதாளம் கொட்டிச் செல்வதில் ஒரு தடையும் கிடையாது. சுவாமி தொட்டையாசார் காலத்திலிருந்தே இவ்வழக்கம் உண்டு. ஊரின் தெற்கில் கொண்டபாளையம் என்னும் சிறு கிராமம் உள்ளது. அங்குதான் பெரியமலை, சிறியமலைகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து நரசிம்மப் பெருமானின் அருளால் மனக்குறை நீங்கி இன்பமுடன் ஊர் திரும்புகின்றனர். ஸ்ரீ இராமானுசர் விசிஸ்டாத்வைத வைணவக் கோட்பாடுகள் பரவித் தழைத்தோங்க நியமித்தருளிய

74 சிம்மாசனங்களுள் இதுவும் ஒன்று. மிகவும் புகழ் வாய்ந்த ஸ்ரீசுவாமி தோட்டாச்சாரியார் என்னும் வைஷ்ணவப் பெரியார் அவதரித்து வாழ்ந்த தலம் இதுவேயாகும். விசயநகரப் பேரரசர்களின் துணைகொண்டு ஸ்ரீ நரசிம்மசுவாமியின் உத்சவ மூர்த்தியான ஸ்ரீபக்தோசித சுவாமிக்குக் கோயிலையும் ஊரையும் கி.பி. 1588 ஏப்ரலில் மகாசம்ப்பேராக்ஷணை செய்து பிரதிஷ்டை செய்தார்.

புராண வரலாறு :-

ஒரு சமயம் திருமலை (பெரியமலை)யில் கடிகாத்ரிநாதனை (அக்காரக்கனியை) துர்வாச முனிவர் வணங்கியபொழுது அங்குப் பெரிய சாதுக்கள் கூட்டம் நிரம்பியிருந்த அந்தக் கூட்டத்தில் "புதன்" என்பவன் இருந்தான் (நவக்கிரகங்களில் ஒருவன்). ஸ்ரீயோக நரசிம்மனின் அருளுணவாகத் திருத்துழாய்மாலையைப் பெறுகிறார். முனிவர் அதைத் தலையிலும் கழுத்திலும் அணிந்துகொண்டு கும்பிட்டு, கூத்தாடிக் களிக்கிறார். அதைக் கண்டு புதன் சிரிக்கிறான். அதனால் சாபம் பெறுகிறான். அந்தச் சாப நீக்கத்திற்காகச் சிறிது காலம் பூலோக வாழ்வு ஏற்பட்டு ஸ்ரீகடிகாசல பாண்டவதீர்த்த வடகரை நந்தவனத்தில் வர்த்திக்கின்ற முனிக் கூட்டங்களுக்குத் தொண்டு செய்து மாசி மாதம் புதன் கிழமையில் பாண்டவதீர்த்தத்தில் திருமுழுக்குச் செய்து தீமொழி நீக்கம் ஏற்பட்டு மீண்டும் தன்னுடைய உயர் நிலையை அடைந்தான்.

வரலாறு:-

ஒரு நாள் சுவாமி தொட்டையாசாரியர் திருமலைக்கு (கடிகாசலத்திற்கு)ப் பல்லக்கில் எழுந்தருளும்போது ஸ்ரீபாதம் தாங்குவோர் பசியினால் வருந்திடவும் அப்போது சுவாமியும்

பைரவ மலைமேல் (தக்கான் குளக்கரை மலை) ஹலாவர்த்தம் (கலப்பையினுல் ஏற்பட்ட தீர்த்தம் ஆகாச கங்கை) என்று மலை அருகின் கீழ்ச் செழிப்பாய் வளர்ந்திருக்கும் எட்டி மரத்தைத் தம் திருவடியால் தொட்டு, புசியுங்கள் என்று கூறவும் அவர்களும் அந்தப் பழங்களைக் கொய்து உண்டனர். அவை மிகவும் இனிமையாக இருக்கக் கண்டு சுவாமியின் பெருமையைப் புகழ்ந்தனர். இந்த வரலாற்றைத் தெரிந்து வழிபடுவதற்காக ஸ்ரீபக்தோசிதசுவாமி எட்டி மண்டபத்தில் சித்திரை சித்திரா பௌர்ணமியில் எழுந்தருளிச் சாத்துமுறையும், எட்டி அப்பம் வழங்கலும் நடைபெறுகிறது.

**காஞ்சி கருட சேவையும் கோபுர தரிசனமும் :—**

'வையம் கண்ட கச்சித் திருநாள்' என்று புகழெய்திய காஞ்சி தேவப் பெருமாள் வைகாசித் திருநாளுக்கு ஒரு முறையும் தவருது எழுந்தருளி வந்த ஸ்ரீசுவாமி தொட்டையாசார் ஒரு முறை திருமேனிப் பாங்கில்லாமையால் அங்கு எழுந்தருள முடியவில்லை. மூன்றும் திருநாள் மாலை எம்பெருமானின் கருடசேவையினையே மனத்தில் எண்ணியவாறு பிரம்ம தீர்த்தமென்ற தக்கான் குளக்கரையில் நாள்கடமைகளைச் செய்தபடி ஸ்ரீகாஞ்சி வரதராசனை ஐந்து சுலோகங்கள்மூலம் வணங்கித் தம் ஆற்றுமையை வெளியிட்டார். அவரது பக்திப் பெருக்கால் ஸ்ரீதேவாதிராசன் ஸ்வத ஏவ கருடாரூடராய்க் காட்சி தந்தருளக் கசிந்த நெஞ்சினராய்க் கண்ணீர் ததும்பக் காண்டருதோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்ட அன்பாளராஞர்.

இந்த ஐதிஹ்யம் இன்றும் திருக்கச்சிமா நகரில் தேவப் பெருமாள் திரு வைகாசி பிரம்மோத்சவம் மூன்றும் நாள் அருணேதய காலத்தில் கருடவாகனத்திலேறிப் பவனி எழுந்

தருளும்போது கோபுர வாயிலில் சிறிது தாமதித்து நின்று சோளசிம்மபுரம் ஸ்ரீதொட்டையாசார் சுவாமிக்குச் சேவை சாதிப்பதாய்க் கர்ப்பூர ஆரத்தி நடந்து வருகிறது.

சோளசிம்மபுரம் தக்கான் குளக்கரையில் தேவப்பெருமாள் கருடவாகனத்தின்மேல் எழுந்தருள்வதை இன்றும் காணலாம்.

இந்த விழாத் தொடர்பாகச் சோளசிம்மபுரத்தில் ஸ்ரீதக்கானுக்கு அதே நாட் காலையில் கருடசேவை புறப்பாடு நடந்து வருகிறது.

ஸ்ரீ யோக ஆஞ்சநேயர்:

இராம அவதாரம் முடிந்து ஸ்ரீ ராமன் வைகுந்தம் செல்லும்போது, தாமும் உடன் வருவதாகக் கூறுகிறார் மாருதி. ஸ்ரீ இராமன் "ஆஞ்சநேயா, நீ ஸ்ரீ லக்ஷ்மி நரசிங்கப் பெருமாளை வழிபட்டுக்கொண்டு வா" எனக் கட்டளை யிடுகிறார். அக்காலத்திலே திருவேங்கட மலைக்குத் தெற்கே ஏழு காத தூரத்தில் உள்ள கடிகாசல மலைப்பகுதி அடர்ந்த காடுகள் சூழப்பட்டு முனிவர்கள் தவச்சாலையாகத் திகழ்ந்து சப்த ரிஷிகள் அவ் வனத்திலே கடிகாசல ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமியைத் தரிசிப்பதற்காகத் தவம் செய்து வந்தனர். காலன், கேயன் என்ற இரண்டு அரக்கர்கள் அவர்கள் தவத்தைக் கலைத்து இடையூறு செய்து வந்தனர். அவர்களை அழிக்க ஸ்ரீமன் நாராயணமூர்த்தி ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமிக்குத் தமது சங்கு சக்கரத்தையும், 4 திருக்கரங்களையும் அருள, ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமி காலகேய வதம் செய்து சப்த ரிஷிகளைக் காத்தார். வீரத்தின் சக்தியைப் பணிந்து புகழ்ந்தனர். ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மப் பெருமாளும் அவர்கள் முன் தோன்றி அருள் புரிந்தார். "ஆஞ்சநேயா, நீ நமது முன்பு அமர்ந்து யோக ஆஞ்சநேயராக மக்களுக்குத் தீராத பிணிகளையும் தீர்த்துக் கலியுலகத்தில் அருள் செய்து வா" என்று கூறினர்.

ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமியும், ஸ்ரீஇலட்சுமி நரசிம்மசுவாமியைப் போன்று பிரம்ம பட்டம் பெறுவதற்காகப் பிரம்ம தேவரைக் குறித்து யோகம் செய்தார். பிரம்ம ரிஷியாக வேண்டும் என யோகம் செய்த அஞ்சனபுத்திரருக்கு முன் பிரம்ம தேவன் தோன்றி, "பிரம்ம ரிஷி நீ நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் கொடுக்கும் அருட்சக்தி பெற்றுவிட்டாய். நீயே பிரம்மரிஷி" என்றார். "நீ சிவ அம்சம், இராம தூதன், உன் புகழ் ஓங்குக" என அருளினர்.

பிரம்மாவாக ஆவதற்கு ஸ்ரீநரசிம்மப்பெருமாளைக் குறித்துத் தவம் செய்து வருகிறார். சோளிங்கபுரத்தில் ஸ்ரீ யோக ஆஞ்சநேயராக, அகிம்சா மூர்த்தியாக, தர்மத்தை நிலைநாட்டும் சத்திய மூர்த்தியாக, மக்கள் பிணி போக்கும் மருத்துவராக, பெண்கள் குறை தீர்க்கும் பேரருளாளராக வீற்றிருக்கிறார். தீராத உடல் நோயினையும், மனநோயினையும் தீர்த்து வைக்கின்றார்.

ஆஞ்சநேயர் குடிகொண்டு தவமியற்றும் மலையில் சஞ்சீவி தீர்த்தம் உள்ளது. பேய் பிசாசு பிடித்தவர்களை அழைத்து வந்து குளிக்கச் செய்து, ஆஞ்சநேய தீர்த்தத்திலே முழுகச் செய்து சன்னிதி முன் நிறுத்தினல் சிறிது நேரம் ஆடிய பேய் ஓடிவிடும். குறை தீர்ந்தவர்கள் மாருதிக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

மார்கழி மாதத்தில் அமாவாசை திதியில் அனுமான் பிறந்ததால் (அனுமந்த ஜெயந்தி) அனுமன் பிறந்த நாள் விழாவை மக்கள் கொண்டாடுகின்றனர். கார்த்திகை மாதம் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் விசேடப் பலன் உள்ளதாக மக்கள் நம்புகின்றனர்.

கடிகை மலையைச் சுற்றி வலம்வர இரண்டு வழிகள் உண்டு. "மஹாப்ரதக்ஷணம்" என்னும் வெளிச் சுற்று ஒன்று, மற்றொன்று உள்சுற்று ஆகும்.

இந்தத் தலத்தில் மலையைச் சுற்றி உள்ள தீர்த்தங்களில் நீராடி ஸ்ரீ யோக நரசிம்மரையும், ஸ்ரீ யோக ஆஞ்சநேயரையும் வழிபடுகின்றவர்கள் நீண்ட ஆயுள், உடல் நலம், செல்வம், நல்ல புதல்வர்ப்பேறு, அறஞ்செய்வதில் பற்று, நல்ல மனம் ஆகியவற்றைப் பெற்று நல் வாழ்வு அடைவார்கள்.

**சேவார்த்திகளின் சேவாக்ரமம் :**

சூனியம், பில்லி, நோய், பிணி, பிசாசம், ஏவல், பைத்தியம், தீராத நோய், மக்கட்பேறு - குறை இவைகளால் பீடிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து 'கொண்டபாளையம்' சத்திரத்தில் தங்கி ப்ரம்ம தீர்த்தத்தில் (தக்கான் குளம்) ஸ்நானம் செய்து பெரிய மலைக்கோ அல்லது சிறிய மலைக்கோ சென்று ஒரு சன்னிதிக்கு 108பிரதக்ஷிணங்கள் செய்து (பிரகாரம் சுற்றி) ஒரு தினத்திற்கு இரண்டு சேவை (பிரகாரம் சுற்றுதல்) செய்து குறைந்தது 12 நாட்களுக்கு விரதம் இருந்து (விரதம் என்பது காலையில் ஒன்றும் சாப்பிடாமல் சேவை செய்யவேண்டும். பிறகு சுவாமி தரிசனம் செய்து தீர்த்தம், பிரசாதம் பெற்று) ஆகாரம் செய்யவேண்டும். பிறகு இரவில் சாப்பிடக்கூடாது. பலகாரம் சாப்பிடவேண்டும். படுக்கையில் படுக்கக்கூடாது. சினிமா கேளிக்கைகளில் பங்குகொள்ளக்கூடாது. மனக் குறைகள் தீர்ந்து சொப்பனம் சாதிக்கப் பெற்று மேற்படி சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்வித்து ஊர் திரும்பவேண்டும்.

## சந்நிதிகளின் அமைப்பு

### திருமலை ஸந்நிதி

மூலவர்:— ஸ்ரீ யோக நரஸிம்ம ஸ்வாமி (அக்காரக்கனி.)
ஸிம்ஹ முகம் கிழக்கே திருமுக மண்டலம்
வீற்றிருந்த திருக்கோலம் யோகாஸனம்
யோக பீடத்தில் தசாவதாரப் பட்டை
ஸ்ரீ சாளக்கிராம மாலை
திருவடிகளில் சூர்ய சந்திரர்கள் நிவாஸம்.
ஸப்த ரிஷிகளுக்கு ப்ரத்யக்ஷம்.
சிறிய திருவடிக்கு (திருவிலச்சினை.)
சங்க—சக்ரம் அளித்தவர்.
ஹேமகோடி விமானம் மிக்கான் - புக்கான் - மறையாய் விரிந்த விளக்கு — இவர்களையும் திரு மங்கை ஆழ்வார் மங்களா சாஸனம் செய்துள்ளார்.
தீர்த்தம் — சிலாபுஷ்கரணி
மலை — ஹனுமத் பர்வதம் — (கடிகாத்ரி)

**எதிர்ப்புறம்**

ஸ்ரீசேனை முதல்வர் — ஸ்ரீநம்மாழ்வார்.
உடையவர் (ராமானுசர்.)
ஸப்தரிஷிகள் :— கச்யபர் — அத்திரி—பரத்வாஜர் ஜமதக்நி—கௌதமர்—வஸிஷ்டர்—விஸ்வாமித்திரர்
பெரிய திருவடி (கருடாழ்வார்)

**தாயார் ஸந்நிதி**

தாயார் — ஸ்ரீஅமுருத பலவல்லித் தாயார்
கிழக்கே திருமுக மண்டலம்

### சின்னமலை

**ஸ்ரீரங்கநாதன் சந்நிதி**

மூலவர் — சயனத் திருக்கோலம்
உத்ஸவர் — நின்ற திருக்கோலம்
உபயநாச்சிமார்கள் — வீற்றிருந்த திருக்கோலம்
தெற்கே திருமுக மண்டலம்

**ஸ்ரீராமர் ஸந்நிதி**

ஸ்ரீராமர் — நின்ற திருக்கோலம்
மேற்கே திருமுக மண்டலம்

**ஸ்ரீஆஞ்சநேயர் ஸந்நிதி**

மூலவர் — ஸ்ரீயோகாஞ்சநேயர்
மேற்கே திருமுக மண்டலம்

சதுர்புஜம் - சங்கம் - சக்ரம் - ஜபமாலை -ஜபஸங்யை
சாளக்கிராம மாலை யோகாஸனம்
வீற்றிருந்த திருக்கோலம்
உத்ஸவர் — நின்ற திருக்கோலம் சதுர்புஜம்
தீர்த்தம் — ஹனுமத் புஷ்கரணி அல்லது
சக்ர தீர்த்தம்

**ஞாயிற்றுக்கிழமை விசேஷம்**

மலை — ஹனுமத் பர்வதம்

## தக்கான்குளம் அல்லது பிரம்ம தீர்த்தம்
## ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸந்நிதி

மூலவர் :— ஸ்ரீவரதராஜ ஸ்வாமி கருடாரூடராய் சேவை சாதிக்கிறுர்.
சதுர்புஜம்-சக்ரம்-சங்கம்- பத்மம் - கதை ஹஸ்தம்
ஒரு திருவடி "திருவடியின்" தோளில்
மற்றொரு திருவடி "திருவடியின்" கையில்
மேற்கே திருமுக மண்டலம்
புண்ய கோடி விமானம்
ஸ்ரீஸ்வாமி தொட்டையாசாரியருக்கு ப்ரத்யக்ஷம்.
பெரியதிருவடி (கருடாழ்வார்)
ஒரு ஹஸ்தத்தில் — திருவடி
ஒரு ஹஸ்தம் — ஞான முத்திரை
உத்ஸவர்—நின்ற திருக்கோலம்

**ஸ்ரீஸ்வாமி ஸந்நிதி**

—உடையவர் (இராமநுசர்)
தெற்கே திருமுக மண்டலம்

**ஸ்ரீஸ்வாமி தொட்டையாசாரியர் ஸந்நிதி**

மூலவர் (மட்டும்) ஸ்ரீதொட்டாசாரியர் ஸ்வாமி நின்ற திருக்கோலம்.
அஞ்சலி ஹஸ்தம்
தெற்கே திருமுக மண்டலம்

**திருக்கோயில் ஸந்நிதி**

ஸ்ரீபக்தோசித ஸ்வாமி (தக்கான்)
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுக மண்டலம்
சதுர்புஜம்—சங்கம்—சக்ரம்—வலது அபய ஹஸ்தம்
—இடது—ஆஹ்வான ஹஸ்தம்.

ஸ்ரீதேவி—பூதேவிகளுக்கும்—ஆஹ்வான ஹஸ்தம்.
ஆஸனம்—சேஷ வாஹனம்
விமானம்—ஹேமகோடி
கண்ணன்—வரதராஜஸ்வாமி
மங்களா சாஸனம்—திருமங்கையாழ்வார்
ஸ்ரீநிவாஸ—புஷ்கரணி—(திருக்குளம்)

**ஸ்ரீஆண்டாள் ஸந்நிதி**

ஸ்ரீஆண்டாள்—மூலவர்—உத்ஸவர்
கிழக்கே திருமுக மண்டலம்

**ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் ஸந்நிதி**

மூலவர்—ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள்
ஸ்ரீதேவி—பூதேவி, நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுக மண்டலம்.

## திருமலையில் உள்ள சந்நிதிகளில் பூசை கால விபரம்.

அருள்திரு யோக நரசிம்மசுவாமி

அருள்திரு யோக ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில்கள்

காலை 9 மணிக்கு நடை திறக்கப்பட்டு மாலை 5 மணிக்கு நடை சாத்தப்படும்,

ஸ்ரீயோக நரசிம்ம சுவாமிக்கும், தாயாருக்கும் வெள்ளிக்கிழமை மட்டும் திருமஞ்சனம் நடைபெறும். நேரம் காலை 9 மணி.

ஸ்ரீஆஞ்சநேயருக்கு ஞாயிறு காலை 9 மணிக்குத் திருமஞ்சனம் நடைபெறும். வேறு கிழமைகளிலும் ஆஞ்சநேயருக்குத் திருமஞ்சனம் செய்து கொள்ளலாம்.

திருமஞ்சனம் செய்ய விரும்புபவர்கள் ஊர்க் கோயிலில் உள்ள திருக்கோயில் அலுவலகத்தில முன் தினம் மாலை 7 மணிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

கார்த்திகை மாதத்தில் வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 5 மணிக்குத் திறந்து இரவு 6 மணி வரை திறந்து இருக்கும். இந் நாட்களில் திருமஞ்சனம் காலை 7 மணிக்கு நடைபெறும்.

## ஆழ்வார்களின் மங்களா சாசனம்

### பேயாழ்வார்

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில் போல் வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங் குமரன் தன் விண்ணகர்.

### திருமங்கை ஆழ்வார்

மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே.

" கண்ணார் கண்ணபுரம் கடிகை "
" காரார் குடந்தைக் கடிகை. "

### ஆசார்யர்களின் மங்களாசாசனம்

ஸ்ரீமந் நாதமுனிகள் மங்களா சாசனம்
திருக்கச்சி நம்பிகள் மங்களா சாசனம்.

ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் (இராமானுஜர்) ஸ்ரீநம்மாழ்வார் சாதித்த திருவாய்மொழியில் 2ஆம் பத்து 9ஆம் பதிகம் 8வது பாசுரம்.

எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில் மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேத விமலர் விழுங்கும் என்
அக்காரக் கனியே உன்னை யானே.

அக்காரக்கனி யெம்பெருமானிடத்தில் சமர்ப்பித்து மங்களா சாசனம் செய்தார்.

ஸ்ரீமணவாள மாமுனிகள் மங்களா சாசனம்
ஸ்ரீஎறும்பி அப்பா மங்களா சாசனம்
ஸ்ரீஸ்வாமி தொட்டையாசாரியார் மங்களா சாசனம்.

# திருக்கடிகை ஸ்ரீஅமிருதபலவல்லி ஸமேத ஸ்ரீயோக நரசிம்மஸ்வாமி ஸுப்ரபாதம்

*ஸ்ரீசைலேதசயர்பாத்ரம்................நித்யம்.*

*கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே |*
*உத்திஷ்ட நரசார்த்தூல! கர்தவ்யம் தைவமான்னிகம் ||*

**பொது :-** கோசலை தன் குலமதலாய். இராமா!
விடியற்காலை ஆயிற்று. வீரமைந்தனே!
காலைப்பொழுதிற் குரிய தெய்வக் கடமைகளை
இறுக்க, நீ துயில் நீங்கி எழுந்தருள வேண்டும்.

*உத்திஷ்டோத்திஷ்ட கோவிந்த! உத்திஷ்ட கருடத்வஜ |*
*உத்திஷ்ட கமலா காந்த! த்ரைலோக்யம் மங்கலங் குரு ||*

கோவிந்தனே! துயிலெழு. கருடக்கொடி
உடையவனே! துயிலெழு.
திருமகள் கேள்வா! துயிலெழு. துயில் நீங்கி
எழுந்து மூவுலகங்கட்கும் இன்பம் தந்திடு.

*மாதஸ் ஸுதாபலலதே! மஹனீயசீலே!*
*வக்ஷோவிஹாரரஸிகே ந்ருஹரேரஜஸ்ரம் |*
*க்ஷீராம்புராசி தனயே! ச்ரிதகல்பவல்லீ!*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹதயிதே தவ ஸுப்ர பாதம் || 1 ||*

**சிறப்பு :-** தாயே! சுதாவல்லிக் கொடியே! பெருமைக்கு
உரியவளே! நரஹரியின் திருமார்பில்
இறைப் பொழுதும் அகலாது விளங்கும் விருப்பம்
கொண்டவளே! திருப்பாற்கடற் செல்வி! நர
சிங்கப் பெருமானின் துணைவியே! உனக்குத்
திருப்பள்ளி யெழுச்சி (கூறுகிறோம்) (1)

*தவஸுப்ரபாத மனவத்யவைபவே!*
*கடிகேச ஸத்குணநிவாஸ பூதலே |*
*கடிதாகிலார்த்த கடிகாத்ரி சேகரே!*
*கடிகாத்ரிநாத தயிதே தயாநிதே || 2 ||*

தீதிலாச் செல்வப் பெருக்கே! திருக்கடிகை
நாதனின் அருட்பண்புகளுக்கு ஆதாரமான
தேவி! எல்லாம் அருளவல்ல கடிகைத் தடங்
குன்றின்மீது விளங்கும் கடிகைக் கோனின்
அன்பே! அருளறம் கொண்ட செல்வி! பள்ளி
எழுந்தருளாயே! (2)

*அத்ரியாதிகாமுனிகளு விரசய்ய ஸந்த்யாம்*
*திவ்யஸ்ரவன் மது ஜரீக ஸரோரு ஹாணி |*
*பாதார்ப்பணய பரிக்ருஹ்ய புரப்ரபன்னு(ஹ),*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 3 ॥*

விடியற்காலைப் பூசனைக்குத் தேன் வெள்ள
மிக்கோடும் தெய்வத் தாமரை முதலிய
மலர்களைப் பறித்துக்கொண்டு, அத்திரி
முதலிய முனிவர்கள் கூட்டமாக
உன்னைத் திருவடி தொழ வந்துள்ளனர்.
நரஹரி, உனக்கு வெற்றி உண்டாகுக. பள்ளி
எழுந்தருளாயே. (3)

*ஸப்தரிஷிஸங்க க்ருத ஸம்ஸ்துதி ஸுப்ரஸன்ன !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ குணரூப, ரமாமஹிப்யாம் |*
*ஸாகம் ந்ருஸிம்ஹ கிரிஸத்வ க்ருதாதிவாஸ !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 4 ॥*

வாமதேவர் முதலிய ஏழு முனிவர்கள் கூட்டமாகப்
புகழ்ந்து, பற்றப்படும் பெருமை உடையவனே !
நரஹரி ! உருவும், திருவும் வாய்ந்த ஒப்பற்ற
திருமடந்தை மண்மடந்தை ஆம் தேவிமார்களுடன்
திருக்கடிகை மலையைக் கோயில் கொண்டவனே !
பள்ளி எழுந்தருளாயே. (4)

*தேவாரி பஞ்ஜன மருத்ஸுதத்த சங்க,*
*சக்ராத பத்ரித பணீச்வர பத்ரிசேஷின் |*
*தேவேந்த்ரமுக்ய ஸரபஜீதபாதம்த்ம !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 5 ॥*

வானவர்தம் பகை அழிக்க வாயுவின் மைந்தனுக்குச்
சங்காழி அளித்தவனே ! சென்னல் குடையாம்
திரு அனந்தாழ்வானைப் பணி கொண்டவனே !
அனைவர்க்கும் தலைவா ! தேவேந்திரன் முதலிய
தேவர்கள் போற்றி வணங்கும் திருவடித் தாமரை
உடையவனே ! பள்ளி எழுந்தருளாயே. (5)

*ஸ்வாமின் ஸுரேச ! மதுரேச !*
*ஸமாஹிதார்த்த ! த்யானப்ரவீண ! விநதாவந ஜாகருக |*
*ஸர்வக்ஞ ஸந்தத ஸமீரித ஸர்வவ்ருத்த !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 6 ॥*

எம்மை உடைமையாய்க் கொண்டவனே ! தெய்வ
நாயகனே ! வடமதுரைத் தலைவனே ! நன்மைக்
கடலே ! நின்னையே மனத்துக்கொண்டு நினைந்
திடும் தவமா முனிவர்களைக் காப்பதில் இமையாத
திருக்கண்ணுடையவனே ! அனைத்தும் அறிபவனே !
என்றும் வேண்டுவோர்க்கு வேண்டுவதை
அறிந்தருளுபவனே ! பள்ளி எழுந்தருளாயே ! (6)

ப்ரஹ்லாத ரக்ஷணநிதான க்ருதாவதார !
முக்த ஸ்வகீய நகரைஸ்புடிதாரிவக்ஷ : |
ஸர்வாபிவந்த்ய நிஜ வைபவ சந்த்ரகாந்த !
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் || 7 ||

பிரஹலாதனைக் காத்திட அவதாரம் கொண்டவனே !
மால்கொண்டு இரண்ணியன் மார்பகலம்
கூருகிரால் குடைந்தழித்தவனே ! அனைவரும்
வணங்கிடும் பெருமை உடையவனே !
அடியவர்க்குத் தண்மதி போல் அருள்
புரிபவனே ! பள்ளியெழுந்தருளாயே. (7)

பக்தோசிதாதி ஸரஸஸ்ஸு குணம்ப்ரக்ருஷ்டம்
தீர்த்தம் ஸுவர்ணகடபூரித மாதரேண |
த்ருத்வா ச்ருதிப்ரவசனைகபரா லஸந்தி
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் || 8 ||

அடியவர்க்குத் தக்கதும் இன்சுவை மிக்கதும்
நன்மையே உடையதும் பெருமை வாய்ந்ததும்
ஆன நன்னீரைப் பொற்குடத்தில் பூரித்துக்
கையிலேந்தி, வேதம் வல்லார்கள், கூட்டமாக
உன் கோயிலில் திரண்டுள்ளனர் ஆதலால்
விரைந்து பள்ளியெழுந்தருளாயே. (8)

ஸம்ச்லாகனீய பரமோத்தரரங்கவாஸி
ஸூரிஸ்துதிப்ரதிதவிக்ரஹ காந்தி காந்த |
ஸத்பிஸ்ஸமர்ச்சித பதாம்புஜ ஸாதுரக்ஷின் !
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் || 9 ||

பெரும்புகழ் மிகும் வட திருவரங்கம்
கோயில் கொண்டவனே ! திவ்விய ஸூரிகளான
ஆழ்வார்கள் புகழ்ந்து பாடுவதால் திருமேனிப்
பொலிவு மிகுபவனே ! மேலோர் போற்றி வணங்கும்
திருவடித் தாமரை உடையவனே ! நல்லோர்களைக்
காப்பவனே ! பள்ளி எழுந்தருளாயே ! (9)

தீர்த்தானி கோமுக கதாந்யகிலானி த்ருத்வா,
பவ்யானி பவ்யனிகரா ; பரிதோ லஸந்தி |
காயந்திகானசதுராஸ் தவதிவ்ய வ்ருத்தம் !
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் || 10 ||

நாற்றிசையிலும் விளங்கும் திவ்விய தீர்த்தங்களிலிருந்து
நன்னீரைப் பொற்குடத்தில் ஏந்தி
அடியார்கள் நின் திருமுன்பே கூட்டமாக வந்துள்ளனர்.
நல்லிசை பாடுவார் உன் இனிய புகழைப்
பாட்டிசைத்துப் பாடுகின்றனர். ஆதலால்
பள்ளியெழுந்தருளாயே ! (10)

*வாராணஸீப்ரதித விஷ்ணுபதீ ப்ரயாகவிக்யாத*
*விச்வதனஸத் கடிகாசலேந்த்ர—*
*ஸம்ப்ரார்த்திதார்த்த பரிதானக் க்ருதைகதீக்ஷ !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 11 ॥*

வாரணாசி, கயை, பிரயாகை முதலிய புகழ்
விளங்கும் பதிகளினும் மிகும் புகழ் வாய்ந்த
கடிகை மலையை - இருப்பிடமாகக் கொண்டவனே !
வேண்டுவோர் வேண்டியது அருள்வதையே
கொள்கையாகக் கொண்டவனே! நரசிங்கப்
பெருமானே ! பள்ளி யெழுந்தருளாயே ! (11)

*பார்ச்வத்வய ஸ்தித ரமாமஹீசோபமான !*
*ஸ்ரீசோளஸிம்ஹபுரபாக்ய க்ருதாவதார !*
*ஸ்வாமின் ஸுசீல ஸுலபாச்ரித பாரிஜாத !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 12 ॥*

திருமகளும், மண்மகளும் இருபால் விளங்க வீற்றிருப்ப
வனே! சோளசிம்மபுரம் செய்த நற்றவப்பயனாகத்
தோன்றியவனே! எம் தலைவ! சீல குணம் உடையவனே !
அடைந்தவர்க்கு அல்லல் நீக்கி,
அருள் புரியும் கற்பகத்தருவே ! பள்ளியெழுந்தருளாயே !(12)

*ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கனதேசிகவர்யபக்தி*
*ஸம்வர்த்தித ப்ரதிதினோத்ஸவ சோபமான !*
*கல்யாணசேல கனகோஜ்வலபூஷணாட்ய !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 13 ॥*

ஸ்ரீநிவாஸதாஸரான தொட்டாசார் என்னும்
மஹாசாரியர் பரமபக்தியுடன் போற்றிட்ட
கட்டளையால் நாள்தோறும் விழாச் செல்வம் கொண்டு
விளங்குபவனே ! மங்களம் தரும் பட்டுத் துகிலும்,
நவமணிகள் பதித்த பொற்கலன்களும் தரித்து அழகேறும்
செல்வமுடையவனே ! பள்ளியெழுந்தருளாயே ! (13)

*ஸ்ரீப்ரம்ஹதீர்த்த தடமாகத மஞ்ஜநாபம்*
*தேவம்ப்ரணம்யவரதம கடிகாத்ரிமேத்ய*
*வாதூலமாநிதி மஹாகுருரேஷ ஆஸ்தே !*
*ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 14 ॥*

கண்டார் மனங்கவரும் ஒழுக்கச் செல்வமுடைய
ஆசார்ய புருஷர்கள் உன் பெருமைக் கேற்கும்
தகுதி வாய்ந்த மிகச் சிறந்த பொற்கலசம், குடை,
சாமரம், கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்களைக்
கைகளிலேந்தியவராய், உன் திருவடித் தாமரை
தொழும் தூய தொண்டு விருப்பம் கொண்டு
உன் திருமுன்பே கூடியுள்ளனர். நரஹரி!
ஆதலால் பள்ளியெழுந்தருளாயே (14)

ஆசார்யபூருஷ வராஹ்யபிராம வ்ருத்தா (ஹ)
அர்ஹாபி பூஜயதர மங்களவஸ்த்து ஹ்ஸ்தா (ஹ) |
த்வத்பாதபங்கஜ ஸிக்ஷேவிஷயாப்ரபன்னு (ஹ)
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ விஜயீபவ, ஸுப்ரபாதம் ॥ 15 ॥

பிரம்ம தீர்த்தக் கரையில் தானே கருட வாஹனத்துடன்
தோன்றி அருள் புரிந்த காஞ்சிபுரம் பேரருளாளனைத்
திருவடி தொழுது, கடிகைத்தடம் குன்றிலேறி உன்னைத்
திருவடி தொழ ஸ்ரீமஹாசார்யரும் வந்துவிட்டார்.
நரஹரி! திருப்பள்ளி யெழுந்தருளாயே! (15)

ஸ்ரீமத் ந்ருஸிம்ஹ கிரிசேகர ஸுப்ரபாதம்
யேமாநவா (ஹ்) ப்ரதிதினம் படிதும் ப்ரவ்ருத்தா (ஹ) |
தேப்ய ப்ரஸன்னவதன (ஹ்) கமலாஸஹாய (ஹ)
ஸர்வாணி வாஞ்சிதபலான் யபிததாதி காமம் ॥ 16 ॥

திருக்கடிகை நரசிங்கப் பெருமானின் திருப்பள்ளி
எழுச்சியைத் தூய மனத்துடன் நாள்தோறும்
ஓதுகின்ற அடியவர்க்குத் திருமகள் கேள்வனுகிய
கடிகைப் பெருமான் இன்முகம் செய்து அவர்
விரும்புவன எல்லாம் மேலும் மேலும் அளித்து
அருள் செய்வது உறுதி. (16)

## மங்களம்

கடிகாசல ச்ருங்காக்ர விமானேதர வாஸினே—
நிகிலாமர ஸேவ்யாய நரஸிம்மாய மங்களம் ॥ 1 ॥

உதீசிரங்க நிவஸஸ் ஸுமநஸ்தோம ஸுக்திபி (ஹி) |
நித்யாபிவ்ருத்தயசஸே நரசிம்மாய மங்களம் ॥ 2 ॥

ஸுதாவல்லீ பரிஷ்வங்க ஸுரபீக்ருத வக்ஷஸே |
கடிகாத்ரி நிவாஸாய ஸ்ரீந்ருஸிம்மாய மங்களம் ॥ 3 ॥

ஸர்வாரிஷ்ட விநாசாய ஸர்வேஷ்ட பலதாயினே |
கடிகாத்ரி நிவாஸாய ஸ்ரீந்ருஸிம்மாய மங்களம் ॥ 4 ॥

மஹாகுருமன ஹ்பத்ம மத்யநித்ய நிவாஸினே |
பக்தோசிதாய பவதாம் மங்களம் சாச்வதீஸ் ஸமா (ஹ) ॥ 5 ॥

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்ய மனேநந்தநஹேதவே |
நந்த நந்தன சுந்தார்யை கோதாயை நித்திய மங்களம் ॥ 6 ॥

ஸ்ரீமந் மஹாபூதபுரே ஸ்ரீமத் கேசவயஜ்வந: |
காந்தி மத்யாம் ப்ரஸுதாய யதிராஜாய மங்களம் ॥ 7 ॥

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாசரதே: பாதௌ: சிரஸா தாரயாம்யஹம் ॥ 8 ॥

ஸ்ரீமதே ரம்ய ஜாமாத்ரு முநீந்திராய மகாத்மனே |
ஸ்ரீரங்கவாஸினே பூயாத் நித்ய ஸ்ரீ: நித்ய மங்களம் ॥ 9 ॥

ஸௌம்ய ஜாமாத்ரு யோகீந்திர சரணும்புஜ ஷட்பதம் |
தேவராஜ குரும் வந்தே திவ்ய ஞானப்ரதம் சுபம் ॥ 10 ॥

வாதுல ஸ்ரீநிவாஸார்ய தனயம் விநயாதிகம் |
ப்ரஞாநிதிம் ப்ரபத்யேஹம் ஸ்ரீநிவாஸமஹாகுரும் ॥ 11 ॥

சண்டமாருத வேதாந்த விஜயாதி ஸ்வஸுக்திபி (ஹி) |
வேதாந்த ரக்ஷகாயாஸ்த்து மஹாசார்யாய மங்களம் ॥ 12 ॥

### மங்களம்

கடிகைத் தடங்குன்றின்மிசை கோயில் கொண்டு
வாழ்பவனே! அனைத்துத் தேவர்களும்
தொழும் பெரியோனே! நரசிங்கப்
பெருமானே உனக்கு மங்களம் உண்டாகுக!

வடதிருவரங்கத்தில் வாழும் நல்லார்கள்
துதித்துப்புகழ்வதால் நாளும் புகழேறும்
செல்வம் உடைய நரசிங்கப் பெருமானே!
உனக்கு மங்களம் உண்டாகுக.

சுதாவல்லி சேர்ந்திலங்கும் மணங்கமழ்
மார்பனே! கடிகை மலையைக் கோயிலாகக்
கொண்டவனே! உனக்கு மங்களம்.

தீமைகள் அனைத்தையும் அழிப்பவனே!
வேண்டுவோர் வேண்டுவன அனைத்தும்
தந்தருளுபவனே! திருக்கடிகை மலையைக்
கோயிலாகக் கொண்ட நரசிங்கப் பெருமானே!
உனக்கு மங்களம்.

மஹாசாரியரின் உள்ளத் தாமரை நடுவில்
என்றும் நின்று விளங்குபவனே!
பக்தோசிதனாகிய உனக்குப் பல்லாண்டு
பல்லாண்டு மங்களம் உண்டாகட்டும்.

# திருக்கடிகை எம்பெருமான் கட்டியம்

நாயிந்தே! நாயிந்தே!

த்வம்மே! அஹம்மே! குதஸ்தத்? தத்பிகுத? இதம் வேதமூல ப்ரமாணுத்! ஏதச்சானுதி ஸித்தாத் அனுபவ விபவாத்! ஸோஅபி ஸாக்ரோச ஏவ! க்வாக்ரோச:கஸ்ய? கீதாதிஷு மமவிதித:! கோஅத்ரஸாக்ஷீ? ஸுதீஸ்யாத்! ஹந்த் த்வத் பக்ஷபாதி ஸஇதி! ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத்வம் ||

மிக்கானை மறையாய் விரிந்தவிளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே.
யஸ்மாதேதத் ஜகதுதயதே ரக்ஷிதம் யேனபூய:
யஸ்மின்னேதி ப்ரலயமகிலம் யன்மயம் யச்சரீரம் |
யஸ்ஸர்வாத்மா மஹதிகடிகா பூதரே யோகபாஜாம்
ஸப்தர்ஷீணும் நரஹரிவபு: ஸந்நிதாத்ஸோ அவதாந்ந: ||
ச்ரிதகடிகாசல ச்ருங்கம் சீதல கருணுதரங்கிதா பாங்கம் |
மனஸிமமோல்லஸதங்கம் வஸதிமஹ: கிமபி வாஸஸாபிங்கம் ||

பராக் பராக்! ஸ்வாமி பராக்பராக்!!

மாமலையாம் கடிகைமலை உச்சியின்மேல் மன்னு இனிதமர்ந்த தேவா, பராக் பராக்!
ஸ்வாயம்புவ மன்வந்தர க்ருதயுக மூன்றும் பாதத்தில் வைசாக சுக்ல பூர்ணிம ப்ருகுவாஸர ஸ்வாதி நக்ஷத்ர யுக்த ப்ராதஸ் ஸந்தியில் இனிதமர்ந்த தேவா பராக் பராக்!
தேவாரிபஞ்சனுன சிறிய திருவடிக்கு சங்கசக்ரமளித்த தேவா பராக் பராக்!
ஸ்வட்க்தாக்ரேஸரரான மஹாசார்யராலே நித்யோத்ஸ-வாதிகள் கண்டருளின தேவா பராக் பராக்!
நீலாஞ்ஜனு த்ரிசிபமுன்னதம் ஆயதாக்ஷம்
ஆஜானு ஜைத்ரபுஜம் ஆயதகர்ணபாசம் |
ஸ்ரீவத்ஸ லக்ஷணமுதார கபீர நாபிம்
பச்யேம தேவ சரதச்சத மீத்ருசம் த்வாம் ||
முடிச் சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ என்று விகல்பிக் கலாம்படியிருக்கிற திரு அபிஷேகமும், மாயன் குழல் என்னும்படியான திருக் குழலும்,

வேரி மயிர் பொங்க என்னும்படியான அழகிய
அடர்ந்த பிடரி மயிர்களும்,
கோளிழைத் தாமரையும் கொடியும் பவளமும் வில்லும்
கோளிழைத் தண்முத்தமும் தளிரும் குளிர்வான் பிறையும்
கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கள்
என்னும்படியான அழகிய திருமுகமும்,
மன்னுதிருநுதலில் சாத்தின முத்தின் திருநாமமும்,
நாச்சிமாருடைய ஹஸ்தாபரணங்களாலே முத்ரிதமாய்
க்ரமுக தருணக்ரீவா கம்பு ப்ரதிமமான திருக் கழுத்தும்,
கற்பகக் காவன நற்பணைத் தோள்களும்,
வைத்தஞ்சல் என்ன அபயப்ரத ஆஹ்வான ஹஸ்தங்களும்,
பெரிய பிராட்டியாருக்குக் கோயில் பட்டினமாய் நித்யாநுபவம்
பண்ணச் செய்தேயும், இறையும் அகலகில்லேன் என்று அவனைப்
பித்தேற்பித்துக் குருமாமணிப் பூண் குழலார் குலாவித்
திரியும் திருமார்பும்,
மின்னு நூலென்னும்படியான மின்னற் கொடிபோலிருக்கிற
திருயக்ஞோப வீதமும்,
தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர் முடிமேலும்
தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையும்,
உள்ளத்துள் நின்று உலாகின்றதே என்கிறபடியே
நித்ய முக்தர் ஹ்ருதயங்களிலே அழகு செண்டேறுகிற
திரு உதரபந்தமும்,
ஸௌந்தர்ய ஸாகரத்தை இட்டளப்பிட்டுச் சுழித்தாற்
போலிருக்கிற திரு உந்தியும்,
ஸந்த்யாராக ரஞ்சிதமான ஆகாசம் போலே திருவரை
பூத்தால் போலிருக்கிற அந்திபோல் நிறத்தாடையும்,
அறச் சிவந்த ஆடையின்மேல் நெளிந்துகொண்டு
நிகுநிகுவென்னும் பொன்னரை நாணும்,
ரம்பாஸ்தம்பாதி கம்பீரமான திருத் தொடைகளும்,
தாமரைநாளம் போலே கண்டகிதமான திருக் கணுக்
கால்களும்,
சங்கரதாங்க கல்பக த்வஜாரவிந்தாம் குச வஜ்ர
லாஞ்சனமாய், நாச்சிமார்களும்கூட கூசித்திடவேண்டும்

படியாய், தேனே மலருமென் கிறபடியே நிரதிசய
போக்யங்களான சேதனர் ஆச்ரயிக்கும்படியான
திருவடிகளை உடையனான தேவரீர் [ஸுதாவல்லீஸமேதனாய்
திருமஞ்சனம் கண்டருள எழுந்தருளியிருக்கும்
இவ்வழகில் ஊழி தொறு மூழி தொறும் வாழ்ந்திடுக
பக்தோசிதனே !
பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய்
அளித்திட்ட வேர்வை யாறவோ!
சினமேவும் அடலரியின் உருவமாகித் திறல்மேவும்
இரணியனதகல் மார்வம் கீண்ட வேர்வை யாறவோ!
மாணுருவாய் மாவலியை மண்வேண்டி மூவுலகம் மூவடியால்
அளந்திட்ட வேர்வை யாறவோ!
கும்பமிகுமதயானை மருப் பொசித்துக் கஞ்சன் குஞ்சி
பிடித்தடித்த வேர்வை யாறவோ!
மாமலையாம் கடிகைநகர் வந்துதித்த வேர்வையாறவோ !
வானோர்கள் தவப்பயனாய் வானோர் போற்றுமாநகராம்
கடிகைநகர் வந்துதித்த வேர்வை யாறவோ!
வானவரும் மண்ணவரும் போற்றிசெய்யும்
அக்காரக் கனியே !
தூசில் வாதூலகுலம் துலங்கவந்த மஹாசார்யராலே
நித்யோத்ஸவாதிகள் கண்டருளின பக்தோசிதனே !
ஸர்வஜகத்ரூபியாய் எப்பொழுதும் தன் ஆராதனத்தை
ப்ருகு மரீச்யத்ரி கச்யபோக் தங்களாகிற வைகானஸ
ஸுத்திரத்தினாலே செய்தருளத் திருஉள்ளம் பற்றி
ஷோடசோபசாரம் கண்டருளின தேவரீர், அண்டம்
எங்கும் அகம் குளிரத் தொண்டர் மனம் வெவ்-
வளிடத் திருமஞ்சனம் கண்டருளவே ! ஓம்
ஜய விஜயீபவ, ஸ்வாமி எச்சரிக்கை.

---

# அஷ்டோத்தர சதநாமாவளி

## (108 திருநாமமாலை)

ஓம் ஹேமகோடி விமானஸ்தாய நம:
,, ஜானுந்யஸ்த ப்ரகோஷ்டகாய ,,
,, சங்க சக்ரதராய ,,
,, பீதவாஸோத் பாஸிகடிதடாய ,,
,, யோகாஸனே ஸமாஸீனுய ,,
,, கிரீடினே ,,
,, அனுமயாய ,,
,, தூர்வாநீலோத்பலவன ச்யாமலாய ,,
,, கோமலாக்ருதயே ,,
,, ப்ரஸன்ன வதனுய 10
,, லக்ஷ்மீ பாஸிதோரஸ்காய ,,
,, உஜ்வலாய ,,
,, நதமர்த் யப்ரஸன்னுர்த்தி ஹாரிணே ,,
,, வனமாலினே ,,
,, ஸ்ரீவத்ஸ கௌஸ்துபதராய ,,
,, சந்த்ர ஸூர்யவிலோசனுய ,,
,, ஸிம்ஹஸ் கந்தாய ,,
,, ஸிம்ஹமுகாய ,,
,, ப்ரஹ்லாத ப்ரியகாரிணே ,,
,, தானவேந்த்ர விபேத்ரே 20
,, ஜகதாம் கர்த்ரே ,,
,, கோப்த்ரே ,,
,, விஷ்ணவே ,,
,, ப்ரேணத்ரே ,,
,, அநிந்திதாய ,,
,, தம்ஷ்ட்ரிணே ,,
,, கேஸரிணே ,,
,, நரகேஸரிணே ,,
,, விபவே ,,
,, ஸப்தர்ஷி வந்திதாய 30
,, பீமாய ,,
,, கதாதராய ,,
,, அதீச்வராய ,,
,, வ்யக்தானனுய ,,
,, மஹோரஸ்காய ,,
,, ஜ்வாலாமாலா விபூஷணய ,,

ஓம் ஷட்கோணமத் யநிலயாய நம:
,, உன்னதச்ருதயே ,,
,, உத்ததாய 40
,, உதக்ர நாஸாய ,,
,, உச்சண்ட காலாய ,,
,, உத்தமமஸ்தகாய ,,
,, வாமதேவாதிப்ரம்மர்ஷி ஸேவிதாய ,,
,, சிவஸேவிதாய ,,
,, ஸர்வகாமப்ரதாய ,,
,, வய க்தாய ,,
,, அவ்யக்தாய ,,
,, புருஷோத்தமாய ,,
,, ஸிம்ஹ காமினே 50
,, ஈசானுய ,,
,, நிதயே ,,
,, அச்யுதாய ,,
,, அவ்யயாய ,,
,, பிங்கலாக்ஷாய ,,
,, ப்ருதுக்ரீவாய ,,
,, விமலாய ,,
,, ஸ்தம்ப ஸம்பவாய ,,
,, முக்திதாய ,,
,, புக்திதாய 60
,, சாந்தாய ,,
,, தாந்தாய ,,
,, ஆனந்த கந்தலாய ,,
,, மந்தார மாலாபரணுய ,,
,, அஷ்ட பாஹவே ,,
,, மஹோதராய ,,
,, ஸனகாதி நுதாய ,,
,, தேவராஜ பூஜிதாய ,,
,, ஈச்வராய ,,
,, ஸூர்யகோடி ப்ரதீகாசாய 70
,, சந்த்ரகோடி ஸமத்யுதயே ,,
,, ச்ருங்ககோடி மஹாசைல வாஸினே ,,
,, ஷ்ருதி வாஸினே ,,

ஓம் ஹநுமத்வந்திதாய நம:
,, லோக சங்கராய ,,
,, சங்கர ப்ரியாய ,,
,, பக்தார்ச்சிதாய ,,
,, பக்தி தாயினே ,,
,, சுபதாயினே ,,
,, ஸடாலம் க்ருதாய 80
,, அவ்யக்ராய ,,
,, உக்ரசாஸனுய ,,
,, உத்ததாய ,,
,, விஸ்தீர்ண வதனுய ,,
,, தீன ரக்ஷகாய ,,
,, ஸுர ரக்ஷகாய ,,
,, ஜபா குஸுமவர்ணுபாய ,,
,, ஹேமயக்ஞோப வீதினே ,,
,, த்ருதஹேமகடி ஸுத்ராய ,,
,, ஹேமாங்காய 90
,, ஹேம குண்டலாய ,,
,, பரிஷ்க்ருத புஜாந்தராய ,,
,, ஹேமபுஷ்ப மஹாமாலா ,,
,, மாலாபரணுய ,,
,, தைத்யராஜவஸா ,,
,, ந்ருணும் சரணுய ,,
,, உத்தமாய ,,
,, அநுத்தமாய ,,
,, தேவாய ,,
,, ராஜா ,

ஓம் ஆஜாநு பாஹுகாய நம:
,, ஜகதாம் போஷணுய 100
,, பூதபாவனுய ,,
,, பத்ரிவாஹனுய ,,
,, வேதாந்த வேத்யாய ,,
,, அவ்யக்ராய ,,
,, வைகானஸ ஸுபூஜிதாய ,
,, ஸம்ஸ்துதாய ,,
,, வாலகில் யாதியோகீந்த்ர ,,
,, பரமார்த்ததாய ,,
,, மஹாக்ஷாய ,,
,, ஹிரண்யாக்ஷசிக்ஷகாய 110
,, பக்தரக்ஷகாய ,,
,, அபராஜிதாய ,,
,, அக்ஷோப்யாய ,,
,, அநந்தாய ,,
,, பராய ,,
,, பரம் ,,
,, அனேகரூபாய ,,
,, ஆதித்யமண்ட லஸ்த்தாய ,,
,, அக்ருத்ரிமாய ,,
,, ஹிரண்யாய 120
,, ஹிரண்ய ஸ்மஸ்ருகாய ,,
,, ப்ரபவே ,,
ஸ்ரீ கடிகாத்ரியோக நரசிம்ஹ ஸ்வாமினே நம:
ஓம்

# ஔத்தாலிகர் செய்த ஸ்ரீயோகாஞ்ஜனேய

## (ஸ்தோத்திரமும் நாமாவளியும்)

அதிபாடலவக்த்ராப்ஜம் த்ருத ஹேமாத்ரிவிக்ரஹம் |
ஆஞ்ஜனேயம் சங்கசக்ரபாணிம் சேதஸி தீமஹி ॥ 1 ॥

பாரிஜாத ப்ரியோ யோகீ ஹநுமாந் ந்ருஹரிப்ரிய : |
ப்லவகேந்த்ர : பிங்கலாக்ஷ : சீக்ரகாமீத்ருடவ்ரத ॥ 2 ॥

சங்கசக்ரவராபீதி பாணி ரானந்த தாயக : |
ஸ்தாயீ விக்ரம ஸம்பன்னோ ராமதூதோ மஹாயசா : ॥ 3 ॥

ஸௌமித்ரிர் ஜீவனகர : லங்காவிக்ஷோபகாரக : |
உததி(ஹ்)க்ரமணஸ் ஸீதாசோக நாசகரோ ஹரி : ॥ 4 ॥

பலீ ராக்ஷஸ ஸம்ஹர்த்தா தசகண்டமதாபஹா |
புத்திமான் நைருதவதூ கண்டஸூத்ர விதாரக : ॥ 5 ॥

ஸுக்ரிவ ஸசிவோ பீம : பீமஸேன ஸஹோ தர : |
ஸாவித்ரி வித்யா ஸம்ஸேவீ சரிதார்த்தோ மஹோதர : ॥ 6 ॥

வாஸவாபீஷ்டதோ பவ்ய : ஹேமசைல நிவாஸவான் |
கிம்சுகாபோ வ்யக்ரதனூ ருஜுரோமா மஹாமதி : ॥ 7 ॥

மஹாக்ரமோ வலசர : ஸ்திரபுத்ரபீசுமான் |
ஸிம்ஹிகா கர்பநிர்பேத்தா பேத்தாலங்கா நிவாஸினும் ॥ 8 ॥

அக்ஷக்ன சத்ருநிக்னச்ச ரக்ஷோமாத்யபயாவஹ : |
வீரஹா ம்ருதுஹஸ்தஸ்ச பத்மபாணிர் ஜடாதர : ॥ 9 ॥

ஸர்வப்ரிய : ஸர்வகாமப்ரத : ப்ராம்சுமுகஸ்ஸுசி : |
விசுத்தாத்மா விஜ்வரஸ்ச ஸடாவான் பாடலாதர : ॥ 10 ॥

பரதப்ரேம ஜனக : சீரவாஸா மஹாக்ஷதக் |
மஹாஸ்த்ர பந்தனஸஹோ ப்ரம்மசாரீ வ்ரதேச்வர : ॥ 11 ॥

மஹௌஷதோபஹர்த்தாசவ்ருக்ஷபர்வா வ்ருஷோதர : |
ஸூர்யோபலாளிதஸ் ஸ்வாமீ பாரிஜாதாவதம்ஸக : ॥ 12 ॥

ஸர்வப்ராணதரோ அனந்த : ஸர்வபூதாதிகோமனு : |
ரௌத்ராக்ருதிர் பீமகர்மா பீமாக்ஷோ பீமதர்சன : ॥ 13 ॥

ஸுதர்சனகரோ வ்யக்த : வ்யாத்தாஸ்யோ துந்துபிஸ்வந : |
ஸுவேலசாரீமைநாக ஹர்ஷதோ ஹர்ஷணப்ரிய : ॥ 14 ॥

ஸுலபஸ் ஸுவ்ரதோ யோகீ யோகிஸேவ்யோ பயாபஹா |
வாலாக்னிமதிதானேக லங்காவாஸிக்ருஹோச்சய : ॥ 15 ॥

வர்தனோ வர்தமானச்ச ரோசிஷ்ணு ரோமசோ மஹான் |
மஹாதம்ஷ்ட்ரோ மஹாசூரஸ் ஸத்கதிஸ் ஸத்பராயண : ॥ 16 ॥

## திருக்கடிகை தீர்த்தங்களும் ஸ்நாநம் செய்ய வேண்டிய நாட்களும் :—

(1) த்ரிம்சத்கோடி ஸஹஸ்ரானி தீர்த்தாணி கடிகாசலே—கடிகாசல தீர்த்தம் சததா அம்ருதபலாஹ்யகம், பக்தோசிதா ஹ்வயாசைவ—ஆஹு: தீர்த்தத்ரயம் சுபம் | தத்தீர்த்தஸம்பவை : பத்மை : கல்லாலோத்பலகைரவை : || காசி கங்கா ப்ரயா காப்யாம் ஸத்யம் சதகுணுதிகம் ||

(2) கடிகாசல பூபாகே கடிகாமபியோவஸேத் |
ஸப்த ஜன்ம கருதம் பாபம் தத்க்ஷணு தேவநச்யதி ||

| தீர்த்தங்களின் பெயர்கள் | | வாரத்தின் நாட்கள் |
|---|---|---|
| 1 | ஹனுமத் தீர்த்தம் (சக்ர தீர்த்தம்) (சின்னமலை) | ஞாயிற்றுக்கிழமை |
| 2 | பைரவ தீர்த்தம் (தக்கான் குளமலை) | திங்கள் கிழமை |
| 3 | வஜ்ர தீர்த்தம்—அகஸ்ய தீர்த்தம் | செவ்வாய்க்கிழமை |
| 4 | பாண்டவ தீர்த்தம் (சின்னமலை அடிவாரம்) | புதன்கிழமை |
| 5 | பிரம்ம தீர்த்தம் (தக்கான் குளம்) | வியாழக்கிழமை |
| 6 | லக்ஷ்மி தீர்த்தம் | வெள்ளிக்கிழமை |
| 7 | கௌதம தீர்த்தம் | சனிக்கிழமை |
| 8 | சேஷ தீர்த்தம் | சனிக்கிழமை |

மேலே கண்டவை முக்கியமான தீர்த்தங்களாகும்.

9 சிலாபுஷ்கரணி (பெரியமலை பின்புறம் உள்ள சுனை)
10 ஹலா வ்ருத்தம் ஆகாச கங்கை)
11 அகஸ்ய தீர்த்தம் (பெருங்காஞ்சி)
12 அக்னி குண்ட தீர்த்தம்
13 ஸோமகுண்ட தீர்த்தம்
14 பத்மஸரஸ், விமானத் தீர்த்தம் (கொடைக்கல்)
15 ராம தீர்த்தம்
16 கல்ஹார தீர்த்தம்
17 வராஹ தீர்த்தம்
18 புண்டரீக தீர்த்தம் (புலிவலம்)
19 பாபநாசம் (ருணவிமோசனம்) (குளிர்காற்று மண்டபம்)
20 அம்ருத குண்டம்
21 வாமன புஷ்கரணி
22 ரத்நஸரஸ்
23 மஹா ஸரஸ்
24 நரசிம்ம தீர்த்தம் (பெரியமலை அடிவாரம்)
25 ஹம்ஸ தீர்த்தம் (பெரியமலை நாலுகால் மண்டப தென்புறம்)
26 பஞ்சாயுத தீர்த்தம் (பழைய தாயார் ஸந்நிதி ஸமீபம் உள்ள தீர்த்தங்கள்)

## கிராம விஸ்தீரணம் 4 சதுர மைல்கள் ஆகும்

## முதல் நிலை பஞ்சாயத்து

## கொண்டபாளையத்திலுள்ள சத்திரங்கள்

1. இவ்வூரில் மொத்தம் 29 சத்திரங்கள் உள்ளன. அவற்றுள் ராயாஜி அன்னதான சத்திரம் திருக்கோயில் மேலாண்மையில் உள்ளது.
2. ரேவூர் நம்பெருமாள் செட்டி சத்திரம்
3. எம். ஏ. தேவராஜ் கல்யாண மண்டபம்
4. வி. குருசாமி நாயுடு கல்யாண மண்டபம்
5. கிருஷ்ண பஜனை மந்திரம்
6. நம்பிள்ளை இராமானுஜ ஏகாங்கி அவர்களின் தவன உற்சவ மண்டபம்
7. கிருஷ்ணதாஸ் மந்திரம்
8. குர்ரம்அக்குலு செட்டி சத்திரம்
9. சவரம்பாக்கம் முனுசாமி நாயுடு சத்திரம்
10. புதூர் ரங்கசாமி ரெட்டி சத்திரம்
11. ராஜபாதர் அம்மாள் & துரைக்கண்ணம்மாள் சத்திரம்
12. எத்திராஜலு நாயுடு, ச. நாராயணதாஸ் & புச்சகாயல ரெங்கய்ய சத்திரம்
13. நாராயணதாஸ் சத்திரம்
14. மருத்துகுல மரபினர் சத்திரம்
15. மதரூஸ் ஆதிலக்ஷ்மி அம்மாள் சத்திரம்
16. தேவராஜ நாயுடு சத்திரம்
17. ஜெகன்னாத ரெட்டியார் சத்திரம்
18. நெல்லூர் ராமசுப்பம்மாள் சத்திரம்
19. சித்தூர் நரசிம்ம ஆச்சாரி சத்திரம்
20. எல். ஜெகன்னாத ரெட்டியார் சத்திரம்
21. கந்தபடி குப்பு செட்டி சத்திரங்கள்
22. ஸ்ரீ ஜான்காச சத்திரம்
23. ரேவூர் நம்பெருமாள் செட்டியார் சத்திரங்கள்
24. காமாட்சி அம்மாள் சத்திரம்
25. கோபால் ரெட்டி சத்திரம்
26. வசந்த மண்டபம்
27. புஜங்கராவ் சத்திரம்
28. கும்பினிபேட்டை பார்வதி அம்மாள் சத்திரம்
29. மதரூஸ் பைடிதல்லியம்மாள் சத்திரம்
30. நெடுஞ்சாலை பயணிகள் மாளிகை இரண்டு அறைகள்
31. சோழிங்கபுரம் பஞ்சாயத்து தங்கும் விடுதி அறைகள்

ஓம் நமோ நாராயணாய:

## படிப் பாடல் பத்து.

ஒன்று சொல்வேன் என்உள் கலந்தாடும்
குன்றம் சுமந்தோய்! குறைதீர வந்தோய்!
நன்றிது நன்றென்று நாங்கள் மகிழ்ந்திட
நாரணனே! படி ஏறி அருள்கவே! 1

மெல்லக் கரம் ஊன்றி மேனி நிமிர்ந்தெழுந்து
வல்லன் உன் அண்ணன் கரம் பற்றியருளியவாறு
எல்லா உலகும் இங்கு எதிர்நின்று பணிந்திட
எங்கள் உயிரே! படியேறி அருள்கவே! 2

முத்தோடு பவளமும் பச்சை மரகதமும்
வைத்திழைத்த பொன்னின் வார்ப்புப் படிமிசை
குத்துதும் என்றஞ்சி கொட்டின மலர்மேலே
கோவிந்தனே! படி ஏறி அருள்கவே! 3

கச்சுடை நல்லிளம் காரிகையர் தமது
இச்சைக்கடி கரணத்து ஏங்கு மன்னவரன்ன
பச்சைத் தமனகமும் பல்வண்ணப் பூமேலே
பதம்தொட்டு அருளிப் படி ஏறி அருள்கவே! 4

ஏடி! இளம் நங்காய்! இன்னே நீ போந்து
பாடிப்பரவும் இவன் படியேற்றம் காண
ஓடி இவன் தாதை உடன் வரப்போதாய்!
உத்தமனே! படி ஏறி அருள்கவே! 5

முந்தும் வினையுடைய மூத்தோன் உனக்கென்று
பிந்தி அருளும்திறம் பிள்ளாய் நீ காணுதியோ!
தந்தை வருமளவும் சற்றே இருந்தெழுந்து
தளிர்பதம் கொண்டு படி ஏறி அருள்கவே! 6

ஏழேழுலகும் வாழ ஏறிக் கொலுவிருக்கும்
மாழை மணிவண்ண! மன்றிலெமக்காக வந்து
தாழ்புவி யத்தனையும் தவமாக்கத் தவழ்ந்தருளி
ஏழின்படி வந்தாய்! ஏறி அருள்கவே! 7

தந்தையும் இன்னபிற சான்ரேரும் இவை காண !
வந்து நின்ருர் எங்கள் வானவரேறே!
மந்தையில் கன்றும் மாவென்றும் ஆநிரையும்
வந்து பரவும்படி ஏறி அருள்கவே! 8

மா வைகுந்தா ! உன் மதிமுகம் வியராதே !
பாவை கரம் ஆடப் பட்டுத்துகில் ஒற்றி
தூவெண் கவரியாட தோகைச் சிவிறியாட
சேவை தருவோய் ! படி ஏறி அருள்கவே ! 9

வந்தது நிலே ! பொன்னின் வாயில் மணிக்கதவம்
சிந்தாத மங்கலநீர் சிந்தும்வரை இருந்து
எந்தெந்த உலகெலாம் தந்தந்தம் மனம் மகிழ
எந்தன் இடைவந்து ஏறி அருள்கவே ! 10

---

ஈரைந்து விழியிவை ஏழிசை மடுக்கவோ
ஈரைந்து செவியிவை எழிலிணைப் பருகவோ
ஓரைந்து தலே நின்ருன் ஒருவன் படியேற
உலகெலாம் வைகுந்தம் ஆவது மெய்யே !

## நாரணன் தன் பாமலர்கள்

அடியாரும் வாழி அரங்கரும் வாழி அலேகடல் சூழ்
படியாரும் வாழி இப்பா வாழி பாவை படிப்பவரும்
கடிகா நகரமும் வாழி எம் மாருதிக் கற்பகமும்
வடியார் வர நரகோளரி நேமியில் வாழியவே.

நீலமேக வடிவழகை நித்தியமும் காண்போம்
நேரமெலாம் பாடியாடி நிர்ப்பயமாய் வாழ்வோம்
உலகெலாம் முழங்கவேண்டும் ஓம் நமோ நாராயணு
படியெலாம் முழங்கவேண்டும் ஓம் நமோ நாராயணு

ஊத்துக்காடு ஸ்ரீ வெங்கடகவி.

---

வேப்பேரி ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னே-84.

| | | | |
|---|---|---|---|
| 12 | அஸ்டோத்திரம் ஒன்றுக்கு ... | .... | 1 00 |
| 13 | காது குத்தல் நபர் ஒன்றுக்கு | .... | 4 00 |
| 14 | தலை மொட்டை ஒன்றுக்கு | ... | 1 00 |
| 15 | பெரிய மலைக்கு நபர் ஒன்றுக்குப் போகவர | | |
| | ஸ்பெஷல் டோலி | .... | 15—00 |
| | ,, சாதாரண டோலி | .... | 12—00 |
| | ,, குழந்தை ஒன்று எடுத்துக் கொண்டு | | |
| | போக வர | ... | 5—00 |
| 16 | சிறியமலைக்கு நபர் ஒன்றுக்குப் போக வர | | |
| | ஸ்பெஷல் டோலி | .... | 12 00 |
| | சாதாரண டோலி | ... | 5 00 |
| | ,, குழந்தை ஒன்று எடுத்துக் கொண்டு | | |
| | போக வர | .... | 3 00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | லட்டு ... | 100 | .... | 150 00 |
| 2 | ஜீரா | தளிகை $\frac{1}{4}$-க்கு | .... | 50 00 |
| 3 | சர்க்கரைப் பொங்கல் | தளிகை $\frac{1}{4}$-க்கு | ... | 15 00 |
| 4 | வெண் பொங்கல் | தளிகை $\frac{1}{4}$-க்கு | .... | 12 00 |
| 5 | புளியோதரை | தளிகை $\frac{1}{4}$-க்கு | | 10 00 |
| 6 | ததியோதனம் | தளிகை $\frac{1}{4}$-க்கு | .... | 8 00 |
| 7 | பாயசம் | தளிகை $\frac{1}{4}$-க்கு | .... | 15 00 |
| 8 | வடை பருப்பு | தளிகை $\frac{1}{4}$-க்கு | .... | 7 00 |
| 9 | பானகம் | தளிகை $\frac{1}{4}$-க்கு | ... | 3 00 |
| 10 | வடை (16)$\frac{1}{2}$-மாலைக்கு | | .... | 10 00 |
| 11 | தோசை (20) சேர் ஒன்றுக்கு... | | ... | 10 00 |
| 12 | சுண்டல் சேர் ஒன்றுக்கு ... | | ... | 10 00 |
| 13 | ததியாராதனை நபர் 10-க்கு .... | | ... | 50 00 |
| 14 | சாமான்கள் மலைக்கு எடுத்துச் செல்லக் கூலி | | | 1—00 |
| 15 | உருப்படி ஒன்றுக்குப் பரிவட்டம் சமர்ப்பிக்க | | | 1 · 00 |

பணம் அனுப்ப வேண்டிய விலாசம் : தொலைபேசி எண் : 85.

செயல் அலுவலர்,

அருள்திரு. லக்ஷ்மி நரசிம்ம சுவாமி தேவஸ்தானம்

சோளிங்கர்

631 102



DONATED BY A DEVOTEE

குருஜி தவத்திரு சுந்தரராமன்
அவர்கள் ஆசியுடன் வழங்கப்படுகிறது.

வேப்பேரி ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-84.